2004 ஜூலை 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

6. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2004-2005."

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		வருவாய்	மூலதனம்	கடன்
			(ரூபாய் ஆயிரத்தில்)	
3	நீதி நிருவாகம்	..	..	..
5	வேளாண்மைத் துறை	31,62,00	..	..
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை-கால்நடை பராமரிப்பு	52,07	..	..

கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
	(ரூபாய் ஆயிரத்தில்)		
9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	47,78,00	15,00	..
12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	61,13,54	..	68,95,00
13 எரிசக்தித் துறை	7,12,50,00	..	..
15 நிதித் துறை	2	..	..
16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்	16,31,03	..	83,56,96
17 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	..	..	75,00
18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	14,86,03	20,00	..
19 உயர் கல்வித் துறை	5,50,10	1	..
20 நெடுஞ்சாலைகள் துறை	36,76	43,00,00	..
21 உள் துறை—காவல்	3,32,97	..	..
23 உள் துறை—சிறைச்சாலைகள்	..	1,25,00	..
26 தொழில் துறை	..	..	2,36,45,99

கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
	(ரூபாய் ஆயிரத்தில்)		
27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்	..	..	3,91,00
33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	15,64,00	81,50,00	..
35 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	18,00,00	..	..
38 பொதுப் பணித் துறை	..	76,15,40	..
39 வருவாய்த் துறை	4,06,60	..	..
40 ஊரக வளர்ச்சித் துறை	1	..	..
41 பள்ளிக் கல்வித் துறை	10,45,52	..	..
43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	56,18,50	..	..
44 தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு	10,00	..	..
47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	25,65	..	..
பெரு மொத்தம்	**998,62,80**	**202,25,41**	**393,63,95**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS